**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**அசல் வழக்கு எண்.** 136/18

வாக்குமூலம்..வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துவேல் | ஜாதி | |
| த/பெ. | முத்தையா | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 65/ 2025 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 03.03.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா வழக்கில் வாய்தா ரசீதுகள் மற்றும் அடங்கள் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது தீர்வை வரி வாங்குவது இல்லை. 1981-ல் இருந்து தற்போது வரை நான் எந்த தீர்வை வரி ரசீதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக நான் புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்த மேல் முறையீடு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. நிலுவையில் இருக்கிறது. வா.சா.ஆ. 11 , 12 ஆவணங்கள் இரண்டும் பிரதிவாதியின் தந்தை ஆறுமுகம் பேரில் இருக்கிறது என்றால் சரிதான். UDR -ல் தவறுதலாக மாறிவிட்டது.

2. தாவா சொத்து என்னுடைய அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்திருந்தால் நான் 1981-ம் ஆண்டே வழக்கு தொடர்ந்து இருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் அனுபவத்தில் இருந்தது என்றாலும், தவறுதலாக செட்டில்மெண்ட் பட்டா ஏற்பட்டதை நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் கிராம மக்களை விசாரணை செய்து ஸ்தள பார்வையிட்டு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் ஆறுமுகத்திற்கும் எனக்கும் தாவா சொத்து சம்மந்தமாக எந்த வித பிரச்சனையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக எனக்கும், எனது சகோதரர் ரெங்காசாமிக்கும் இடையில் வாய்மொழி பாகம் ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்து பொருத்து செட்டில்மெண்ட் காலத்தில் பட்டா தவறுதலாக ஏற்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டு என் சகோதரர் உயிருடன் இருந்த காலத்தில் பிரச்சனை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 1, 2 பிரதிவாகளுக்கு ஏற்பட்ட பாகப்பிரிவினையில் 1-ம் பிரதிவாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அவரிடம் இருந்து 3-ம்

பிரதிவாதி கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஆறுமுகம் ஆதியில் கடலை, கத்திரிக்காய் சாகுபடி செய்து வந்தார் என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு தாவா சொத்து ஆரஸ்பதி மரங்களை பயிரிட்டு 2 வெட்டுகளை வெட்டி விட்டார் என்றாலும், தற்போது 3-வது வெட்டுக்காக இருக்கிறது என்றால் சரியல்ல. நான்தான் ஆரஸ்பதி மரங்களை பயிரிட்டேன்.

4. தாவா வழக்கு தோதிற்காக நான் ஆரஸ்பதி மரங்களை பயிரிட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றாலும், உண்மையில் பயிரிட்டு இருந்தால் அடங்கல் ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு பட்டா எண் 4 3 புல எண் 8/2 விஸ்தீரணம் 32 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். 3-ம் பிரதிவாதி எந்த வருடம் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு ஞாபாகமில்லை. வழக்கு சொத்து எனக்கு சொந்தமாக இருந்திருந்தால் ஞாபகம் இருக்கும் என்றாலும், 1, 3 பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க தாவா வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வழக்கு சம்மந்தமாக அறந்தாங்கி வட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகத்தில் பலமுறை வழக்கு கொடுத்து மேற்படி வழக்குகள் ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அதை எதிர்த்து புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்திருக்கிறேன். நான் மேல்முறையீடு செய்திருப்பதாக சொல்வது தவறு என்றாலும், அது தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு தான் தாவா வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் என் தகப்பனார் முத்தையா மற்றும் பிரதிவாதி தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் எந்தவித பிரச்சனையும் ஏற்படவில்லை என்றாலும், நான் தவறாக வழக்கு தொடர்ந்து இருக்கிறேன் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்து சம்மந்தமாக எங்களுக்கு பாகம் ஏற்பட்டதா இல்லையா என் அண்ணன் உயிருடன் இருந்த காலத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தால் தெரிய வரும் என்பதால் இவர் இறந்த பிறகு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொருத்து வாய்மொழி பாகம் தான் ஏற்பட்டது. ஆவணம் இல்லை. நான் சொல்வது போல் வாய்மொழி பாகம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கஜா புயலில் என்னுடைய புளிய மரங்கள் பாதிப்பு ஏற்பட்டதாக சொல்லியிருப்பதில் அது சம்மந்தமாக இழப்பீடு வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை. அது சாய்ந்து இருப்பதை வெட்டும்போது தான் பிரச்சனை வந்தது. மேற்படி புளிய மரம் உண்மையில் என் மரமாக இருந்திருந்தால் இழப்பீடு வழங்கியிருப்பார்கள் என்றால் சரியல்ல.

7. நான் இழப்பீடு வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. கிராம நிர்வாக அலுவலரை நான் போய் பார்த்த போது வருவாய் ஆவணங்கள் என் பேரில் இல்லாததால் இழப்பீடு

வாங்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் சொத்தை 1, 2 பிரதிவாதிகள் இருக்கும் வரை நான் பிரச்சனை செய்யவில்லை என்றாலும், 3-ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய பிறகுதான் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர் என்பதாலும், நான் வசதியானவர் என்பதாலும், அவரை மிரட்டி பணம் பறிக்க வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்ய என் அண்ணன் மனைவியை நான் அழைத்தபோது அவர் வர மறுத்து விட்டார் என்றால் சரியல்ல. உண்மையிலேயே தாவா சொத்து என் குடும்பத்துக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருந்திருந்தால் என் அண்ணனின் வாரிசுகளை தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1, 2 பிரதிவாதிகளின் தந்தை ஆறுமுகத்தின் அனுபவத்தில் தான் இருந்தது என்றாலும், நான் எந்தவித ஆவணமும் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சுமார் 45 வருடங்களாக 1, 2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

8. வழக்கு சொத்து சம்மந்தமாக தாவா கிராமத்தில் பஞ்சாயத்து நடந்து பஞ்சாயத்தில் வழக்கு சொத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு சொந்தம் என்று என்னை கண்டித்தார்கள் என்றால் சரியல்ல. ஆதியில் இருந்து வருவாய் ஆவணங்கள் அனைத்தும் 1, 2 பிரதிவாதிகளின் தந்தை பேரில்தான் இருக்கிறது என்றாலும், நான் பொய்யாக வழக்கு தொடர்ந்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முற்றிலும் பாத்தியம் இல்லாமல் பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பறிக்க வழக்கு தாக்கல் செய்திருப்பதால் வழக்கு நிலை நிற்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.